**செயற்பொறியாளர், நீ.வ.து., மண்தன்மை மற்றும் ஆராய்ச்சிக் கோட்டம், தரமணி, சென்னை – 113 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை:** பொறிஞர். நா.சுரேஷ் பாபு, எம். டெக்.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,

**செயல்முறை ஆணை எண்இசி1/876/2024-3, நாள்.22-10-2025**

பொருள்: பணியமைப்பு – நீ.வ.து – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி – திரு.S. ராஜயோகம், பிறந்த தேதி (04.01.1988) என்பவருக்கு பாசன உதவியாளர் பதவியில் இருந்து பதவி மாற்றத்தில் (By Transfer) இளநிலை உதவியாளராக , பதவி பணிநியமனம் வழங்கியது – 24.09.2024 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறைப்படுத்தி தகுதி காண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண்.2151 – பொ.ப. து., நாள்.27.12.1988
2. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்( பொது) நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ் .3 (3)/ 21589/2024, நாள். 16.07.2024
3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களின் செயல்முறை ஆணை எண். பிஇ .3 /2870/2024, நாள். 28.08.2024
4. கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., வடிவமைப்பு வட்டம், சென்னை –5 அவர்களின் செயல்முறை ஆணை எண். இ .3 /1480/2024, நாள். 29.08.2024
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்இசி1/1052/2024, நாள்.30.08.2024

***************

பார்வை (2) இல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களின் செயல்முறை ஆணையின் படி திரு. S. ராஜயோகம், பிறந்த தேதி (04.01.1988) என்பவருக்கு பாசன உதவியாளர் பதவியில் இருந்து பதவி மாற்றம் (By Transfer) மூலம் தமிழ் நாடு அரசு பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 ( தமிழ்நாடு சட்டம் 2016) – இல் உள்ள பிரிவில் 17(1) ன் படி தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் கீழ், தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பதவிக்கு சம்பள ஏற்ற நிலை – 8, ரூ.19,500 – 71,900 என்ற ஊதிய விகிதத்தில் இக்கோட்டத்தின் உபகோட்ட அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர், பணியிடத்திற்கு பணியமர்வு செய்து ஆணை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட பார்வை (3) மற்றும் (4) இல் காணும் மறுபணியமர்வாணைகளுக்கு இணங்க பார்வை (5) ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் திரு. S. ராஜயோகம், அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு மறுபணியமர்வு செய்து ஆணை வழங்கப்பட்டு இவர் இக்கோட்டத்தின் உபகோட்ட அலுவலகத்தில் 24.09.2024 முற்பகல் அன்று இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி விதிகளின் படி திரு. S. ராஜயோகம், **இளநிலை உதவியாளரது பணி அவர் பணியில் சேர்ந்த நாளான 24.09.2024 முற்பகல் முதல் பணி வரன் முறைப்படுத்தி ஆணை** வழங்கப்படுகிறது. இதன் பொருட்டு விதி தளர்வு ஏதும் செய்யப்படவில்லை. மேலும் தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி விதிகள் 34 இன் பிற்சேர்க்கை V இல் தெரிவித்துள்ளவாறு இவர் இப்பதவிக்கென நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணை வழங்கப்படும் என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி விதி 32 (அ) (i) இல் தெரிவித்துள்ளபடி

பணி வரன்முறைப்படுத்தப்பட்ட நாளான **24.09.2024** முற்பகல் முதல் தகுதி காண் பருவம் துவக்கி தகுதிகாண்பருவ காலமான மூன்றாண்டு தொடர்ப்பணி காலத்தில் இரண்டாண்டு பணியினை நிறைவு செய்யும் பொருட்டும் ஆணை வழங்கப்படுகிறது.

**SURESH BABU**
**EXECUTIVE ENGINEER_SOIL MECHANICS AND RESEARCH CHENNAI_DO_WRD**
**EXECUTIVE ENGINEER_SOIL MECHANICS AND RESEARCH CHENNAI_DO_WRD**

பெறுநர்
திரு.S. ராஜயோகம், இளநிலை உதவியாளர்,
கற்காரை உப கோட்டம்,
தரமணி, சென்னை – 600 113.

நகல்

1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்( பொது) நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. தலைமைப் பொறியாளர். வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை –அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., வடிவமைப்பு வட்டம், சென்னை –5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது .
4. உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., கற்காரை உபகோட்டம், தரமணி, சென்னை–113 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது .

**SURESH BABU**
**EXECUTIVE ENGINEER_SOIL MECHANICS AND RESEARCH CHENNAI_DO_WRD**
**EXECUTIVE ENGINEER_SOIL MECHANICS AND RESEARCH CHENNAI_DO_WRD**

Digitally signed by
SURESH BABU
Date: 22-10-2025
16:43:30



E No. 50SMRC/481/2025-E1 (Computer No. 628566)